பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை)

ராஜா அண்ணாமலைபுரம், மதராஸ்-28.

" முயற்சி திருவினை யாக்கும் "

தொகுதி 25 | சார்வரி ஞு ஆடி மீ 1960 ஜூலை மீ | பகுதி 4

பொருளடக்கம்

		பக்கம்
நமது வாசகர்களுக்கு	...	81
தினசரிப் பாட போதனைக் குறிப்புகள்	...	83
திராவிட மொழிகளுக்கு ஜெர்மானியர் செய்த பணி	...	88

உள் நாடு : வருஷ சந்தா ரூ. 2.00 தனிப் பிரதி 25 ந.பை.

தென் இந்திய ஆசிரியர் சங்கம்

21-5-1960-ல் மதுரை மகாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகஸ்தர்கள்

தலைவர்:— திரு. G. கிருஷ்ணமூர்த்தி, M.L.C.

உப தலைவர்கள்:— 1. திருமதி சரஸ்வதி சீனுவாசன், (Headmistress, Avvai Home Basic Training School, Madras.)

2. திரு. குப்புசாமி, (Headmaster, Sourashtra High School, Madura.)

காரியதரிசி:— திரு. S. D. கிருஷ்ணமூர்த்தி ராவ், (Hindu High School, Madras.)

கூட்டுக் காரியதரிசி:— திரு. K. S. கிருஷ்ணன், (சேதுபதி ஹைஸ்கூல், மதுரை.)

பொக்கிஷதார்:— திரு. J. D. முத்தையா, (Kellet High School, Madras.)

உஷார் கமிட்டி:— *Convener* திரு. M. கணேசன், (Board High School, Melur, Madura Dt.)

தலைவர்



காரியதரிசி

எலிமெண்டரி பாடசாலைக்குரிய

எமது புதிய புத்தகங்கள்

புதிய பாடதிட்டத்தை அனுசரித்து எழுதியவை

1—5-ம் வகுப்புகளுக்குரியவை

பொங்கல் தமிழ் வாசகம்

முதல் புத்தகம்	(முதல் வகுப்பு)	37 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ,,
மூன்றும் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	50 ,,
நான்காம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	65 ,,
ஐந்தாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	85 ,,

கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு

முதல் புத்தகம்	(முதல் வகுப்பு)	40 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ,,

லீலாவதி சுலப கணிதம்

முதல் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	90 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	ரூ. 1 00

நவீன சுலப கணிதம்

முதல் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	ரூ. 1 25

நவீன சமூக வரலாறு

முதல் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	45 ந.பை
இரண்டாம் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	75 ,,

புது முறை சமூக வரலாறு

முதல் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	ரூ. 1 12
இரண்டாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	ரூ. 1 90

நமது இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

முதல் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	40 ,,
மூன்றும் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	80 ,,

கிண்டர்கார்டன் தமிழ் அப்பியாசங்கள்

முதல் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	60 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	60 ,,
மூன்றும் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	60 ,,

பி. ஜி. பால் அண்டு கம்பெனி

புத்தக வியாபாரிகள்

பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை-1

பாலர் கல்வி

தொகுதி 25 | சார்வரி ஹூ ஆடி மீ 1960 ஜூலை மீ | பகுதி 4

நமது வாசகர்களுக்கு

'பாலர் கல்வி' இம்மாதத்திலிருந்து புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கத் தலைவரின் மேற்பார்வையில் வேலை செய்யத் தொடங்குகிறது.

இந்த சென்னை இராஜ்யத்தில் ஆரம்ப ஆசிரியராகிய நாம் சுமார் ஒரு லக்ஷம். நம் குடும்பங்களில் சுமார் 6 லக்ஷம் பேர் இருக்கிறோம். இவர்களின் நன்மைக்குப் பாடுபடுவதே இந்தப் பத்திரிகையின் நோக்கம்.

ஜனநாயகத்தில் அபிப்பிராயங்களை உருவாக்கி எடுத்துச் சொல்லுவதின் மூலம் நாம் செய்யும் கடமைகளுக்கேற்ற உரிமைகளைப் பெறலாம். அப்படிச் செய்வதற்கு பத்திரிகைகள் உதவுகின்றன. எந்த அளவிற்கு ஒரு பத்திரிகை உபயோகப்படுத்தப்படுகிறதோ, அந்த அளவிற்குத்தான் அதன் செல்வாக்கு உயரும்.

நமது வாசகர்கள் இப்பத்திரிகையின் நோக்கங்களை மற்ற ஆரம்ப ஆசிரியர்கட்கு எடுத்துக்கூறி, சந்தாதாரர்களாகச் சேரும்படி செய்வார்களென நம்புகிறோம்.

ஆசிரியர் உயர்வு சமூகத்தின் உயர்வு. ஆசிரியருக்குச் செய்யும் சேவை சமூகத்திற்குச் செய்யும் சேவை. வருங்கால சமூகத்தை உருவாக்குவதே ஆரம்ப ஆசிரியரின் வேலை. அக்காரணத்தைக் கொண்டே ஆரம்பக் கல்விக்கு சர்க்கார் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

உழைப்பிற்குப் பலன் உண்டு. இதுவே நாம் கண்ட உண்மை. ஒற்றுமையே பலம். இதுவே ஜனநாயகத்தின் அடிப்படை.

தேசப்பிதாவின் தியாகத்தினால் கிட்டிய சுதந்திரத்தைக் காப்பாற்ற, தேகவலிமை, மனோவலிமை, ஆத்மீக சக்தியுடன் கூடிய மக்களை உருவாக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கும் நம் முன்னேற்றத்தை நாட்டின் முன்னேற்றம் என்று சொல்வது மிகையாகாது. இந்த முன்னேற்றத்திற்குப் பாடுபடத் தொடங்கியிருக்கும் பத்திரிகைக்கு ஆயிரக்கணக்கில் சந்தாதாரர்கள் சேருவார்களென்ற நம்பிக்கை வீணாகாது.

யாவரும் வாங்கி உபயோகப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடனேயே வருடத்திற்கு ரூபாய் இரண்டே சந்தாவாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஹையர் கிரேடு ஆசிரியர்கள்

அரசாங்கம் பிறப்பித்துள்ள உத்திரவுகளால் எந்த ஹையர் கிரேடு ஆசிரியரும் வேலை இழக்க நேரிடாது. அரசாங்கத்திற்கு இவ்விஷயத்தில் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சம்பளத்திட்ட கமிஷன்

பல்வேறு நிர்வாகங்களின் கீழ் வேலை செய்யும் ஆரம்ப ஆசிரியர்கள் ஒரே விதமான சம்பளத்திற்கு உரிமையுடையவர்களென்ற சிபார்சை சர்க்கார் ஏற்றுக் கொண்டதற்கு மகிழ்ச்சி. ஹையர் கிரேடு ஆசிரியரோ, செகண்டரி கிரேடு ஆசிரியரோ, எந்த நிர்வாகத்தின் கீழ் வேலை செய்தாலும், எந்த வகுப்பில் வேலை செய்தாலும், ஒரே சம்பளம் பெறவேண்டுமென்ற நம் பல வருட கோரிக்கை நிறைவேற்றப்பட்டது ஆசிரியர் முன்னேற்றத்தில் ஒரு சிறந்த அம்சம் நிறைவேறியதாகும்.

வாழ்க்கைக்குப் போதுமான ஊதியம்

ஒரு ஹையர் கிரேடு ஆசிரியருக்குக் குறைந்தபக்ஷ சம்பளம் நூறு ரூபாய்

வேண்டுமென பல வருடங்களாகக் கேட்டு வந்தோம். சம்பளக்கமிஷனும் இந்த அடிப்படையை வைத்துக்கொண்டு ஆபீசு வேலைகளுக்குச் சிபார்சு செய்திருக்கிறது. லோயர், ஹையர் கிரேடு ஆசிரியர்கள் இந்தச் சம்பளத்திற்குத் தகுதியானவர்களாகக் கருதப்படாதது வருந்தத்தக்க விஷயம். மாதம் நூறு ரூபாய்க்குக் குறைந்து எந்தக் குடும்பமும் விலைவாசியுயர்ந்த இக்காலத்தில் நடத்த முடியாதென்பது யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க விஷயம்.

வருட உயர்வு

வருடத்திற்கு ரூபாய் ஒன்று உயர்வு என்பது மாறவேண்டும். மூன்று ரூபாய்க்குக் கீழ் எந்த உயர்வும் உதவிகரமாயிருக்காது.

20 வருட ஸ்கேல் தேவை

சம்பளக் கமிஷன் Promotion இல்லாத வேலைகளுக்கு 20 வருட ஸ்கேல் நலமெனக் கூறியிருக்கிறது.

எல்லா கிரேடு ஆசிரியர்களுக்கும் திருப்தியளிக்கும் வகையில் 15 வருடத்துடன் முடியும் ஸ்கேலை மேலும் 5 வருடங்களுக்கு உயர்வான வருட உயர்வு கொடுத்து 20 வருட ஸ்கேலாகச் செய்யக் கோருகிறோம். இதனால், சர்க்காருக்கு உடனடிச் செலவு இருக்காது.

செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்

5 வருட ஊழியத்திற்குப் பிறகு வாங்கி வந்த 4 ரூபாய் வருட உயர்வு ரூபாய் மூன்றாகக் குறைக்கப்படுவது பொருந்தாது. இவர்கள் விஷயத்தில் மட்டும் இக்குறை ஏற்பட்டிருக்கிறது. குடும்ப பாரம் ஏற்படும் காலத்தில் வருட உயர்வு அதிகரிப்பதே நியாயமென மற்றவர் விஷயத்தில் சம்பளக் கமிஷன் எடுத்துக் கூறியிருக்கிறது. குறைந்த பக்ஷம் வருட உயர்வில் இரண்டு மடங்காவது அதிகப்படுத்துதல் நியாயமானதே.

வீட்டு வாடகைப்படி, வைத்தியச்சலுகை, பென்ஷனுக்குக் கிராக்கிப்படி

இவ்விஷயங்களில் பாகுபாடு நீக்கப்படவில்லை.

பல வருடங்களாக வீட்டு வாடகைப் படியும், வைத்தியச் சலுகையும் கேட்டு வருகிறோம். சம்பள விஷயத்தில் நியாயம் வழங்கியதுபோல இவ்விஷயங்களிலும் நிர்வாக வேறுபாடு இல்லாமல் நியாயம் தேவை.

ஆரம்ப ஆசிரியர்களில் பெரும்பாலோர் வாங்கும் பென்ஷன் ரூபாய் பத்துக்குக் குறைவாகவே இருக்கிறது. அப்படிப் பட்டவர்களுக்கு கிராக்கிப்படி பத்து ரூபாய் கொடுத்துதவுவது மிகப் பொருத்தமாகும். இது விஷயத்தில் சர்க்காருக்கு வருஷத்தில் சுமார் ஐந்துலக்ஷ ரூபாயே செலவாகும்.

ஜில்லாபோர்டு, பஞ்சாயத்து ஆரம்பப் பள்ளிகள்

இப்பள்ளிகளில் புதிய சம்பள விகிதப்படி தவக்கமில்லாமல் சம்பளம் ஆசிரியர்களுக்குக் கிடைக்கும்படி வேண்டிய நிதி உதவியைச் சர்க்கார் செய்திருப்பார்களென நம்புகிறோம்.

1-6-1959-ல் ஏற்பட்ட பிரச்னைகள்

சம்பள பாக்கி

1-6-1959 முதல் சம்பள வசூல் பள்ளிகளாக மாறிய பள்ளிகளிலிருந்து நீக்கப்பட்ட ஆரம்ப ஆசிரியர்கள் சுமார் 200. இவர்களில் பலருக்கு சுமார் மூன்று மாத காலம் வரை வேலை கொடுக்கப்படவில்லை. இந்த ஆசிரியர்கள் வேலையில்லாமலிருந்தது அவர்களின் குற்றமில்லை.

பலமுறைகள் கேட்டும் இவர்கள் சம்பளம் சர்க்காரிடமிருந்து இதுவரை கிடைக்கவில்லை.

கருணைகூர்ந்து சர்க்கார் இவர்களுக்குக் கிடைக்கவேண்டிய சம்பளத்தைக் கொடுத்துதவ வேண்டுகிறோம்.

சர்வீஸ் ரிஜிஸ்தர் சம்பளம்

1-6-1959-ல் ஏற்பட்ட திட்டத்தினால் நேரடிச் சம்பள முறை கொண்டுவரப்பட்டது. அக்காலத்தில் ஆசிரியர்களின் சம்பளம் நிர்ணயிக்க அவசியமென சர்க்கார் கருதி நிர்ணயித்ததில் பலருக்குச் சம்பளக் குறைவு ஏற்பட்டது.

எந்தக் காரணத்தாலும், வாங்கும் சம்பளம் குறைக்கப்படக் கூடாது என்ற நியாயமுண்டு. இவ்விஷயத்தில் சர்க்கார் நியாயம் வழங்க வேண்டுகிறோம்.

தினசரிப் பாட போதனைக் குறிப்புகள்

எஸ். ஜகந்நாதன்

வகுப்பு ஆசிரியர் ஒவ்வொருவரும் சீரான வழியில் வேலை செய்ய சிலகட்டுப் பாடான வரம்புகள் உள்ளன. வருஷ பாட திட்டம், பாட புத்தகங்கள், தினசரி கால அட்டவணை, பாட திட்டம் குறிப்பிடாத பள்ளிக்கூட சம்பந்தமான சில பொது அலுவல்கள் எல்லாம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சோதனைகள், பரீட்சைகள், வீட்டு வேலை கொடுத்தல், எழுதி வந்தவைகளைத் திருத்துதல், விளையாட்டுப் பயிற்சி, கல்வி சம்பந்தமான உல்லாசப் பிரயாணங்கள், இவை போல பலவும் உள்ளன. சில ஆசிரியர் தமது வகுப்புக்கல்லாது இதர வகுப்புகளுக்கும் பாடம் கற்றுக் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு ஆசிரியரும் தாம் அன்றாடம் கற்பிப்பவைகளை முன் தினமே யோசனை செய்து பாடக் குறிப்புக்கள் எழுதிவைக்க வேண்டும் என்ற நிபந்தனையும் சில இடங்களில் உண்டு. பள்ளிக்கூட மேற்பார்வையாளர்கள், பரிசோதகர்கள் வருமுன் சில பள்ளிக்கூடங்களில் இவ்வேற்பாடு ஜரூராக நடக்கும். அவர் வருமுன் 10, 15 தினங்களுக்கான பாடங்களுக்காவது இக்குறிப்புகள் எழுதப்பட்டு அவருக்குச் சமர்ப்பிக்கப்படும். ஆனால் இவ்வேற்பாடுகளை தினசரி அனுஷ்டானத்தில் காண்பது அரிது. மேலும் அவர் வந்துபோன மறுதினம் இவ்வேற்பாடுகளும் மறையும்.

எனது சொந்த அனுபவங்கள்

தினசரி கால அட்டவணையிலுள்ள ஒவ்வொரு பாடத்திற்கும் என்ன செய்ய வேண்டுமென்ற மன எண்ணத்துடன் வகுப்பில் பிரவேசிப்பேன். அவையவைகளுக்கான முன்னேற்பாட்டுடன் உபகரணங்கள், சாதனங்கள், சோதனைக்கருவிகள் மற்றுமுள்ள சேகரங்கள், படங்கள், பண்டங்கள் உடன்கூடித்தான் செல்வேன். பிள்ளைகளையும் முன்கூட்டியே அந்தந்த நேரங்களில் அவர்களே செய்து வர வேண்டிய, கொண்டு வரவேண்டிய, சேகரம் செய்து வரவேண்டிய விஷயங்களையும் முன்கூட்டி அறிவிப்பேன். பாட புத்தகங்களில் இல்லாத விஷயத்தை நடத்துவதானால் வகுப்புக் கரும்பலகையில் நான் எழுதியவைகளை அத்தட்சணமே குறிப்புப் புத்தகத்தில் எழுதிக் கொள்வேன். மறு வருஷத்திற்கு இவ்வேற்பாடு கட்டாயம் பயன்படும். தனித்தனி அப்பியாசம் கொடுக்கத்தக்க தாள்களை கார்பன் தாளில் வகுப்புப் பிள்ளைகள் எண்ணிக்கைக்கு தக்கவாறு தயார் செய்துகொள்வேன். இவைகளை யான் விடுமுறை ஒய்வு நாட்களிலும் முன்கூட்டியே ஆயத்தம் செய்து வைத்திருப்பேன். அன்றாடத் திருப்பணி திருப்பணியாகவே நடைபெற வேண்டுமென்ற திடசித்தத்துடன்தான் கடமையைச் செய்வேன். பாடப்புத்தகங்களிலிருந்து கொடுக்கப்படாத பயிற்சி கேள்விகளை ஞாபகமாய்க் குறித்துவைத்துக்கொள்வேன். ஒரு சமயம் 4, 5 வருஷம் பிள்ளைகளுக்கு அன்றாடம் எழுதிப்போட்ட கணக்குகளை கோடை கால விடுமுறை நாட்களில் இக்கணக்குகள் யாவற்றையும் வகைப்படுத்தி வேறு மூன்று நோட்டு புத்தகங்களில் எழுதிவைத்துக்கொண்டதையும் யான் ஆசிரியர்களுக்கு ஞாபகமூட்டுகிறேன். முக்கியமான ஒரு விஷயம் குறிப்பிடத்தக்கது. அன்றாடம் ஒவ்வொரு பாட நேரத்திலும் செய்த வேலையைப் பற்றின குறிப்புகளை இரண்டொரு வரியில் அன்று மாலை குறிப்பு நோட்டுப் புத்தகத்தில் எழுதிவைத்துக்கொள்வது என்பதே. 1913 முதல் 1916 எழுதிவைத்த குறிப்புகள் மிகவும் விரிவாய் இருக்கும். பின்பு இக்குறிப்பு நோட்டு வகுப்பு அறையிலேயே தொங்க விடப்பட்டிருக்கும். சில வருஷங்கள்கடந்த பின் இந்தக் குறிப்பு என் வகுப்பு மேஜையின்மீது காணப்படும். இவ்வேற்பாடு சொல்லளவில் நில்லாமல் செய்கையளவிலும் இருந்துவந்தது.

தினசரிக் குறிப்பு : சில உதாரணங்கள்

I. பாஷைப் பாடம்

1-11-40 படமூலம் வாய்மொழிப் பயிற்சி: வற்சாசுரவதம், பகாசுரவதம்.

6-11-40 வன போஜனம்: பாடம் 13. அகாசுரவதம் முதல்பத்தி.

7-11-40 செய்யுள் - 6-வது.

8-11-40 அகாசுரவதம் முடிவு: பையன்கள் வாசிப்பு. பகல் எழுத்து வேலை.

13-11-40 பரமன் மகிமையைப் பிரமன் கண்டறிதல்.

14-11-40 செய்யுள்: ஒரு நாள் உணவை......

15-11-40 கோபாலன்: பாடம் 14: பையன்கள் வாசிப்பு, பள்ளிக்கூடக் கையெழுத்துப் பத்திரிகைத் தாள்: வாசிப்பு.

18-11-40 வாசக பாடம்—பாடம் 18. வாசிப்பு எழுத்து வேலை.

20-11-40 "எறும்பு" முன்பாதி. கோபாலன்: தேனுகாசுரவதம்.

21-11-40 செய்யுள்: ஆன முதலில்......

22-11-40 காளிங்க மர்த்தனம். வாசக பாடம் "எறும்பு": பிள்ளைகள் வாசிப்பு.

25-11-40 வாசக பாடம் "எறும்பு": பின் பாதி.

27-11-40 பிள்ளைகள் கதை சொல்லுதல்.

28-11-40 செய்யுள் ஒப்புவித்தல். புதுச் செய்யுள்: மரம் பழுத்தால்......

29-11-40 சொல்வதெழுதல்.

குறிப்பு: வாசக புத்தகம் ஒன்றும் உப பாட புத்தகமாக "கோபாலன்" என்ற புத்தகமும் அக்காலத்தில் உண்டு.

II. கணித பாடம்

1-11-40 நாட்கள் கணக்குப் பண்ணுதல்.

5-11-40 பக்கம் 80 B.

6-11-40 நாட்கள் கணக்குப் பண்ணி மொத்தமாகக் கூலி கண்டறிதல். பக்கம் 82 A.

7-11-40 ஷ பயிற்சி.

8-11-40 ஷ பயிற்சி.

12-11-40 நேரம் கண்டறிதல்.

13-11-40 ஆற்றங்கரைக்குச் செல்லுதல். வாய்க்கால் ஜலம் ஆற்றுடன் கலத்தல்.

14-11-40 பக்கம் 84. படகுப் பிரயாணம். நேரம், வேகம், கண்டறிதல்.

15-11-40 ரயில்வேப் பிரயாணம். பக்கம் 85.

18-11-40 பக்கம் 86: வண்டி சேரும் நேரம் அறிதல்.

19-11-40 ஷ தொடர்ச்சி: காகிதம் எண்ணலளவை.

20-11-40 காகித அளவை: பேல், ரீம், குயர், காகிதம். பக்கம்...

21-11-40 ஷ தொடர்ச்சி.

22-11-40 காகிதம்: பேல் ரீமாக மாற்று: பக்கம்...

25-11-40 ஷ தொடர்ச்சி. காகிதம் பேலாக மாற்று: குரோஸ், டஜன், உருப்படி.

26-11-40 சாதாரண பின்னங்கள்: செய்கை: பின்னப்பெட்டி.

27-11-40 பக்கம் 103. வாய்மொழிப் பயிற்சி.

28-11-40 முக்கியமான அளவைகளில் பின்ன பாகங்களை அறிதல்.

III. இயற்கைப் பாடம்

4-11-40 மழையின் பொருட்டு பிள்ளைகள் வகுப்பு அறையில் அமர்ந்து வார்த்தைகள் போட்டிகளைக் கொண்டு விளையாட்டு.

11-11-40 தண்ணீர் கொதிக்கவைத்து சோதனை: ஜலத்திலிருந்து ஜலம் மாறுதல் விசேஷங்கள்: படமூலம்: சித்திரம் வரைதல்.

18-11-40 காலசக்கரம் குறிப்புகள் எழுதுதல் (18உ வரை).

25-11-40 விதைகள் பரவுதல்.

28-11-40 சேகரம் செய்யப்பட்ட பருத்தியிலிருந்து கொட்டைகள் எடுத்தல்.

IV. வாழ்க்கை சம்பவங்கள்:—

பல பாடங்கள் இணைந்த செயல் முறைத் திட்டம்

விஷயம்: நமது ஆகாரம்

சரிக் குறிப்பு:

20-1-40 எனது ஆகார அட்டவணை: வெள்ளி, சனி, ஞாயிறு நாட்களில் காலை பகல் இரவு ஆகாரம்.

20-11-40 நெல் விளையும் ஜில்லாக்கள், தேசப் படத்தில் குறித்தல் காய்கறி வகைகள் சித்திரம் வரைதல்.

22-11-41 வயற்புறம்: உழவு, கலப்பை கவனித்தல். கடல் நீரை ஒரு கோப்பையில் வெயிலில் வைத்தல்.

23-1-41 எழுத்து வேலை: கலப்பை: சித்திரம்: உப்பு: ஒரு விடுகவி. தாளுடன்கூடிய ஒரு பிடி நெல்மணிக் கதிர்கள்—வகுப்புக்குக் கொணர்தல்.

24-1-41 கோப்பையில் உப்புத்திவலைகள் காணுதல். ஆகார வகையில் காணப்படும் பதார்த்தம், காய்கறிகள், பழங்கள், கிழங்கு கீரை பருப்பு தினுசுகள், பால், இறைச்சி சர்க்கரை இவைகளை இப்பத்திகளில் குறித்தல். மற்றும் உப்பு செய்யும் விதங்கள். படங்களிலிருந்து அறிதல். கடல் நீர் சமையலறை சேரும் வகையில் ஏற்படும் மாறுதல்கள்.

27-1-41 சேகரித்த உப்பை ஒரு புட்டியில் வைத்தல். தோட்டத்தில் வேர்க்கடலை அறுவடை: உளுந்துச் செடிகளிலிருந்து உளுந்து சேகரித்தல்.

28-1-41. ஜனவரி 25, 26, 27 தினங்களில் ஆகார வகைகள் ஒரு விருந்தில் சாப்பிட்ட பதார்த்தங்கள்: மேற்கண்ட 9 பத்திகளில் குறிப்பிடுதல். தோட்ட வேலை, அறுவடை பற்றின குறிப்புகள், பெண்கள் களிமண் வேலை செய்தல்.

29-1-41 பாடப் புத்தகம் தயார் செய்தல் தாங்களாக வரைந்த சித்திரங்களுக்கு வர்ணம் தீட்டல்.

31-1-41 கரும்புச் சாறிலிருந்து வெல்லம் காய்ச்சுதல். விடுகவிகள் சத்துப் பொருள்கள், குழந்தைகள் இருபிரிவினராகப் பிரித்து வேலை தொடர்தல்.

3-2-41 தோட்ட மரங்கள், வீட்டு மிருகங்கள், தென்னை, வாழை, பசு.

4-2-41 ஆகாரம் தயாரிக்கும் பாண்டங்கள்: எவைகளால் செய்யப்பட்டவை.

5-2-41 கடைத் தெரு சென்று வருதல், மளிகை சாமான்கள் எங்கிருந்து வருகின்றன. வாங்கிவரும் அளவைகள், சில்லறை வியாபார அளவைகள்.

6-2-41 சாப்பிடுமுன், சாப்பிடும்போது, சாப்பிட்ட பிறகு அனுசரிக்க வேண்டிய சுகாதார முறைகள்.

10-2-41 ஜலம்.

11-2-41 ஆரோக்கிய ஆகாரம்.

14-2-41 ருசிதரும் பதார்த்தங்கள் ; அறுசுவை ஆகாரம்.

17-2-41 நீர்; எழுத்து வேலை.

தேசப்படம்: நெல் விளையும் ஜில்லாக்களில் ஆங்காங்கு நெல்மணிகளைப் பதிய வைத்தல்.

20-2-41 திலிதிலி என்ற நீலிச்சாய மரங்கள் அடர்ந்த தோப்பில் வனபோஜனம்.

27-2-41 பால் பண்ணை பார்வையிடுதல் வெண்ணெய் எடுத்தல்.

V. இயற்கை மாறுதல் அல்லது கால சக்கரக் குறிப்புகள்

உதாரணம் : வருஷம் 1941 : மாதம் பிப்ரவரி

சூ. உ.=சூரிய உதயம்: சூ. அ.=சூரிய அஸ்தமனம்

தேதி	வான் நிலை	சூ. உ.	சூ. அ.	காய்கறி	மரம்	தோட்டப் பயிர்	விசேஷ நாட்கள்
1	வெயில்	6·36	6·10	கத்தரி	புளி காய்	துவரை முற்றிக்	7. வெள்ளி
2	வெயில்	6·35	6·10	அவரை	முற்றிப் பழுக்க	காய்ந்து வருகிறது	மொகரம்
3	வெயில் இலேசான மழை	6·35	6·11	முளைக் கீரை	ஆரம் பம்	26-2-41 துவரை	11. செவ் வாய்
4	வெயில்	6·35	6·11	மணத் தக் காளி		பறித்தல்	தைப் பூசம்
5	வெயில்	6·35	6·11	தக் காளி		சேப்பங் கிழங்கு வெட்டி எடுத்தல்	25. அமா வாசை
6	வெயில்	6·35	6·12	வெள் ளரி			
7	வெயில்	6·36	6·12	முள் ளங்கி			
8	வெயில்	6·34	6·13	வள்ளிக் கிழங்கு			

வான் நிலையில் வெயில், மழை, குளிர், மப்பு, காற்று, தூரல், வானவில், பனி, மூடுபனி இவைகளை அன்றுடம் கண்டதை மாத்திரம் தேதி வாரியாகக் குறிக்கவும்.

சூரிய உதயம், சூரிய அஸ்தமனம் குறிப்புகள் தினசரிப் பத்திரிகையிலிருந்து குறிக்கப்பட வேண்டியவை. 5வது வகுப்பு முதற்கொண்டே இவைகளை எழுதி வரலாம்.

அதிக வெப்பம், குறைந்த வெப்பம் இவை 6-வது வகுப்பு முதல் தனிப்பட்ட பத்தியில் எழுதி வர வேண்டிய பாகம் காய்கறி, மரம், தோட்டப் பயிர்: உள்ளூர் தோப்பு, காய்கறித் தோட்டம், பள்ளித் தோட்டம், இவை இங்கு காணும் நிகழ்ச்சிகளைக் கவனித்து எழுத வேண்டும். கடைசி பத்தியில் அம்மாதத்துப் பண்டிகை நாட்களைக் குறிக்கலாம். மற்றும் ஜீவ வர்க்கத்தில் காணும் சில நிகழ்ச்சிகளை அதற்கென வேறு பத்தியில் குறிக்க வேண்டும். இவைகளைக்குறிப்பதற்கென்றே காலச் சக்கரம் என்ற குறிப்புப் புத்தகம் ஒன்று அக்காலத்தில் தயாரிக்கப்பட்டு இக்காலத்தும் இருந்து வருகிறது. மேலும் விவசாயத்திற்கு என்றே ஒரு தனிப் பத்தியும் ஏற்படுத்துவது பொருந்தும், மாதக் காலச் சக்கரம், வருஷ கால சக்கரம் இரண்டையும் தயாரிப்பது சிலாக்கியம்.

VI. புத்தகசாலைக் குறிப்புகள்

A. நான்காம் வகுப்பு—1950-51:

பெயர்	29·1	5·2	12·2	10·2	13·3	26·3
சாந்தகுமாரன்	507	502	539	530	535	—
சத்தியபாமா	490	493	a (528)	510	510	499
சிவராமன்	508	495	521	499	529	535
ஷண்முகம் K.	534	539	504	527	490	536

புத்தகங்கள் நிரம்ப இருப்பின் தலைக்கு ஒருபுத்தகம் வீதம் கொடுக்கலாம். புத்தகங்களமீது உள்ள எண்களே இங்கு காணப்பட்டுள்ளன. ஒரு புத்தகம் இரண்டு நாள் தரப்பட்டது. அதே புத்தகம் எடுத்துக் கொள்ளப்பட்ட இரண்டாவது தினம் இங்கு குறிக்கப்படவில்லை. அன்று பள்ளி வராதவர் a என்று குறிக்கப்பட்டிருக்கிறார்கள். வாசகசாலை படிப்பு நேரத்தில் முதல் நாள் வராமல் அடுத்த நாள் வந்தால் அன்று தரப்பட்ட புத்தகம் பக்க வளைவுகளில் காண்பிக்கப்பட்டுள்ளது. (528)

B. மூன்றும் வகுப்பு:

பெயர்	தேதி		
	25-1-50	1-2-50	16-2-50
பலராமன், பாலசுந்தரம்	கழகப் பூங்கதை (3)	சிறு கதை விருந்து (1)	இளைஞர்க்கேற்ற இனிய கதை (1)
கோபால், முர்தூஸா	வீரக் குயில்	பெண் தேடின ஆமை	கதாவாசகம் (2)
சாந்தி, சாரதா	கழகச் சிறு கதை	கதாவாசகம் (3)	வீரக் குயில்
	16-2-50	22-2-50	9-3-50
மாபூப் பாஷா, சாம்பசிவம்	குரங்கு திருடின முட்டை	அம்மா இல்லாத பூனைக்குட்டி	சிறுகதை விருந்து (2)

இவ்வகுப்பில் இரண்டு பிள்ளை அல்லது இரண்டு பெண்களுக்கு ஒரு புத்தகமாகத் தரப்பட்டிருக்கிறதைக் கவனிக்கவும்.

மற்றும் சில குறிப்புகள்

மேலும் பிள்ளைகள் மௌனமாகப் படித்துக்கொண்டிருக்கும்போது மேற்பார்வை ஆசிரியர் ஆங்காங்கு இருவர்க்குமிடையே சென்னை தரையில் உட்கார்ந்து அவர்கள் சற்று உரக்கப் படிக்கும் விதத்தை அறிய வேண்டும். மற்றொரு நாள் அவ்வாறு உட்கார்ந்து அவர்கள் படித்தறிந்த விஷயம் யாதென்று கண்டறிய இரண்டொரு கேள்விகள் கேட்பதும் அவசியம்.

8-11-49

ஜயா T. D.

திரும்பத் திரும்பச் சொல்லுதல்—குறில் நெடில்—கற்பனை

14-11-49

சுப்பிரமணியன் A.

மெது—உச்சரிப்பு—முன் கூட்டிப் படித்தல்.

இவ்வாறு அவர்கள் வாசிப்பில் கண்டறியும் பிழைகளைக் குறிப்பு வைத்து மறுபடி அப்பிழைகள் நேராவண்ணம் எச்சரிப்பதும் பயனைத்தரும்.

தினசரிக் குறிப்புகளின் அனுகூலம்

தினசரிக் குறிப்புகளை எழுதுவது ஆசிரியரின் ஆத்ம திருப்திக்கு அத்தாட்சி. இக்குறிப்புகளை ஒட்டி மேல் வருஷப் பாடம் நடத்துங்கால் மற்றும் புது யோசனைகள் முறை மாறுமுதல், செயற்கை அப்பியாசங்கள், பலவேறு பயிற்சிகள் தோன்றக் கூடும். இவைகளைக் குறிப்புவைத்து முழுத்

திறமையுடன் பாடம் நடத்த ஏதுவாயிருக்கும். வகுப்பு ஆசிரியர் ஓய்வு எடுத்துக் கொண்ட காலத்தில் வேறு ஆசிரியர் இவ் வகுப்பிற்குப் பாடம் நடத்தும்போது அவருக்கு "விட்ட இடம், தொட்ட இடம்" நன்ருகப் புலப்படும். "பசித்தவன் பழங் கணக்குப் பார்ப்பான்" என்ற முறையிலும் இக்குறிப்பு பயன்படக்கூடியதே. எனது 40 வருஷ அனுபவங்களில் இவ்வேற்பாடு எனக்கு நிரம்ப மனத் திருப்தியைத் தந்திருக்கிறது. நாம் பாட திட்டம், புத்தகப் பாடங்கள் இவைகளையொட்டி பாடம் நடத்தவும், ஒரு சமயம் நம்மை நாமே பரிசீலனை செய்து பார்த்துக்கொள்ளவும், தேவையான சந்தர்ப்பங்களில் மேலதிகாரிகளுக்குக் காண்பிக்கவும் இவ்வேற்பாடு நற்பயனைத்தரும். தற்கால ஆரம்ப ஆசிரியர்கள் அனைவரும் தவருமல் அன்ருடம் இவ்வாறு தினசரி பாடக் குறிப்புகளை எழுதி வர வேண்டுமென்பதே எனது கோரிக்கை. எந்த மேற்பார்வையாளரையும் இப்பாடக் குறிப்பு திருப்தி செய்யும் என்பதில் ஐயமில்லை.

ஆசிரியர் வேலைக்கு அன்றன்றே நியாயத் தீர்ப்பு

மனிதனின் காலம் ஆன பிறகே அவனது வாழ்க்கையைப் பற்றின தீர்ப்பு கடவுளால் அளிக்கப்படும் என்றும் இதர மனிதர்களால் கூறப்படும் என்பது பொதுவான அபிப்பிராயம். 30, 40, 50 குழந்தைகளைத் தினசரிப் பரிபாலித்து வரும் ஆசிரியருக்கோ அன்றன்றே தீர்ப்பு அளிக்கப்படுகிறது. வகுப்பே நியாய சபை. வகுப்புக் குழந்தைகளே தீர்ப்புக் கூறும் நியாயாதிபதிகள். சில சமயம் ஏகோபித்த தீர்ப்பும் உண்டு. சில நாட்களில் மாறுபாடான தீர்ப்பும் உண்டு. "நன்ருகப் பாடம் சொல்லிக் கொடுத்தார், கோபமாய் இருந்தார், அசட்டையாய் இருந்தார், பேசிக் காலத்தைப் போக்கினுர், வகுப்பு வேலையைத் தவிர இதர வேலைகளில் கருத்தாக இருந்தார், எழுதி வந்ததைப் பார்க்காமல் கையெழுத்துப் போடுவார், பாவம்! ஆசிரியருக்குத் தலைவலி! பாதி பாடங்களை நன்ருகச் சொல்லிக் கொடுத்தார்" என்றெல்லாம் பிள்ளைகள் சொல்லிக்கொண்டே போவார்கள். குழந்தைகள் வாக்கிலிருந்து வரும் இவ்வபிப்பிராயங்களே சரியான தீர்ப்பு. மேலும் அன்ருடம் ஆசிரியருக்கு ஆத்மசோதனை நடந்துகொண்டேயிருக்கிறது. இச்சோதனைக்கும் குழந்தைகள் தீர்ப்புக்கும் சரியான பொருத்தம் இருக்கும் என்றே நம்புகிறேன்.

"குழந்தைகளுடன் இருந்து குழந்தைகளுக்காக வாழ்வோம்."

சர்க்கார் ஒப்புக்கொண்ட சம்பளத் திட்ட கமிஷனின் சிபார்சுகள்

	சம்பளம் ரூ.	கிராக்கிப்படி ரூ.
லோயர் எலிமெண்டரி கிரேடு	55-1-70	10/-
ஹையர் எலிமெண்டரி கிரேடு	65-1-70-2-90	10/-
செகண்டரி கிரேடு	90-4-110-3-140	10/-

எந்த நிர்வாகத்தின் கீழ் இருந்தாலும், ஷை சம்பளம் உண்டு.

சர்வீஸ் ஆனவர்களுக்கு மூன்று முழு வருஷங்களுக்கு ஒரு சம்பள உயர்வு உண்டு.

எவருக்கும் ரூ 5-க்குக் குறைவாகவோ, ரூ. 25-க்கு மேற்பட்டோ சம்பள உயர்வு இருக்கக் கூடாது.

சம்பள நிர்ணயம்:—இப்பொழுது வாங்கும் சம்பளமும், கிராக்கிப்படியும் சேர்ந்த தொகைக்குப் பெயர் Present Emoluments. இதில் கிராக்கிப்படி ரூ. 10 குறைக்க வேண்டும். மீதித் தொகைக்கு Present pay for purposes of fixation in the new Scale என்று பெயர். இந்தத் தொகை புதிய சம்பள ஸ்கேலில் அடுத்த கட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும். பிறகு 3 முழு வருடத்திற்கு ஒரு உயர்வு வீதம் கூட்டவேண்டும். இதுவே புதிய ஸ்கேலில் நிர்ணயிக்கப்பட வேண்டிய சம்பளம்.

திராவிட மொழிகளுக்கு ஜெர்மானியர் செய்த பணி

(ஜெர்மனியில் தென்னிந்திய ஆராய்ச்சி)

வால்டர் லீஃபர்

சமயம், தத்துவம் இலக்கியம் ஆகிய துறைகளில் பாரதநாட்டுக்குள்ள தொன்மையான மரபு எப்போதுமே ஐரோப்பிய அறிஞர்களின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்து, தீவிர ஆராய்ச்சிக்கு ஒரு தூண்டு கோலாகவும் இருந்துவந்திருக்கிறது. பாரதநாடு பற்றிய ஆராய்ச்சி என்பது மேற்கு நாடுகள் பலவற்றின் கல்வித்துறையில் முக்கியமானதொரு பிரிவாகிவிட்டது. பாரதநாட்டின் புராதனப் பண்பாட்டின் ஸம்ஸ்கிருத, திராவிட அம்சங்களில் ஜெர்மனி நெடுங்கால மாகவே இடைவிடாது ஆராய்ச்சி நடத்தி வந்திருக்கிறது; மிகவும் நுட்பமான ஆராய்ச்சி இது. உலகப் புகழ்மிக்க ஜெர்மன் கவிஞர் கெதே காளிதாஸனின் "சாகுந்தலம்" நாடகத்தை அதன் அசல் வடிவில் படித்து அனுபவிப்பதற்காகத் தமது அறுபதாவது வயதில் ஸம்ஸ்கிருத மொழியைக் கற்ருர்; சாகுந்தலத்தின் பேரழகை நுகர்ந்துவிட்டு அவர் ஆனந்தக் கூத்தாடினர். வேத இலக்கியத்தைக் காட்டிலும் ஆழ்ந்த கருத்துள்ள ஓர் இலக்கியத்தைத் தாம் கண்டதே யில்லை என்று புகழ்மிக்க பாரத ஆராய்ச்சிப் பேரறிஞர் மாக்ஸ்முல்லர் வன்மையுடன் கூறியதை உலகம் அறியும்.

ஆனல், ஸம்ஸ்கிருதப் பண்பாட்டை வெகுவாகப் பாராட்டுவதற்கும் முன்னலேயே ஜெர்மன் பேரறிஞர்கள், தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு ஆகிய மொழிகளின் பிறப்பிடமான தென்னிந்தியாவின் சிறப்பைக் கண்டு கொண்டுவிட்டார்கள். பாரத நாட்டின் பழம்பெரும் மரபின் மற்ற அம்சங்களுடன் இரண்டறக்கலந்துவிட்ட தென்னிந்தியா, நாடுமுழுவதன் தத்துவ, ஆத்மிக அமைப்புக்கும் ஓர் அடிப்படையாக விளங்குகிறது.

1616-ஆம் ஆண்டில் நாலாவது க்ரிஸ்டியான் என்னும் டென்மார்க் மன்னன் டேனிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி ஒன்றை ஸ்தாபிப்பதற்கு அனுமதி வழங்கினன். அக்காலத்தில் டென்மார்க் தேசத்துக்கு ஜெர்மனியுடன் பலவிதத் தொடர்புகள் இருந்தன; ஏனென்ருல் அந்நாளில் டென்மார்க் மன்னர்கள், ஜெர்மனியின் ஸ்லெஸ்விக் பகுதியின் ட்யூக் பதவியையும் வகித்துவந்தார்கள். நாலாவது க்ரிஸ்டியான் மன்னர் கடலோர நாடுகளின் வட்டாரத்தில் உயர் அதிகாரம் பெறவிரும்பினர். அப்போது இலங்கையில் கண்டி மன்னனுக்கு போர்ச்சுகீசியருடன் சில தகராறுகள் இருந்ததால் டேனிஷ் மன்னர் அந்த நிலைமையைத் தமது நோக்கத்துக்கு முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டார். கண்டி மன்னனுக்கு உதவியளிப்பதற்காக அவர் அனுப்பிவைத்த டேனிஷ் படைக் கப்பல் அணி, சண்டையில் தோற்றுப்போய்விடவே, அந்த அணியைச் சேர்ந்த டேனிஷ்காரர்கள் தப்பியோடித் தஞ்சாவூருக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே தஞ்சை மன்னன் அவர்களை அன்புடன் வரவேற்ருன். ரகுநாத நாயக்கர் என்னும் அந்த மன்னன் டேனிஷ்காரர்களுக்கு கடற்கரையில் தரங்கம்பாடி என்னும் சிறு கிராமம் ஒன்றைக் கொடுத்தான். அப்போது பதினைந்து சதுரமைல் பரப்பே கொண்டிருந்த தரங்கம்பாடி பின்னர் நன்கு விஸ்தரிக்கப்பட்டது.

கையெழுத்துப் பத்திரங்கள்

பார்தொலோமியஸ் ஸீகென்பால்க் என்னும் பெரியார் 1706-ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஒன்பதாம் தேதியன்று தரங்கம்பாடி போய்ச் சேர்ந்தார். ஜெர்மன் அறிவுச் சாதனையின் வரலாற்றில் அந்ததினம் ஒரு முக்கியமான நாள். ஏனென்ருல் தமிழ் ஆராய்ச்சியை ஆரம்பித்த முதல் ஜெர்மனியர் ஸீகென்பால்க்தான். அவர் கையெழுத்துச் சுவடிகளைச் சேகரித்து, தமிழர்களின் ஆத்மிக மரபுகளை அறிந்து கொள்ள முயன்ருர். ஸீகென்பால்கின் அறிவுடைமையின் ஆழத்தை முதலாவது தமிழ் இலக்கணத்திலும், தென்னிந்திய தேவதைகளின் வரலாற்றிலும், க்ரிஸ்துவ

நூல்களின் தமிழ் மொழிபெயர்ப்புக்களி லும் காணலாம்.

ஸீகென்பால்கின் மிகப் பெரிய நூல் மலபார் தேவதைகளின் வரலாறுபற்றியது. இதை அவர் 1713-ஆம் ஆண்டில் எழுதி முடித்தார். தென்னாட்டு தெய்வங்களின் முதலாவது பொது வர்ணனை இந்த நூலில்தான் வெளிவந்தது; ஹிந்துப் பண்டிகைகள் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றையும் இந்நூல் விளக்கியது.

பார்தொலேமியஸ் ஸீகென்பால்க் எழுதிய இன்னொரு நூல், பாரதநாடுபற்றிய ஆராய்ச்சியில் ஓர் அமர இலக்கியமாகும்; முதலாவது தமிழ் இலக்கணமான இது லத்தீன் மொழியில் எழுதப்பட்டது.

ஜெர்மன் அறிஞர்களின் முதல் நூல்கள்

தரங்கம்பாடி, நெடுங்காலத்துக்கு, பாரத நாடுபற்றிய ஆராய்ச்சிக்கு ஒரு கேந்திரமாக விளங்கி வந்தது. பார்தொலேமியஸ் ஸீகென்பால்கை யடுத்து ஜே. பி. ஃபேப்ரீகஸ் என்னும் இன்னொரு பெரியார் வந்தார். அவர் 1779-ஆம் ஆண்டில் "மலபார்-ஆங்கில அகராதி" என்பதாக ஒரு நூலைத் தொகுத்துத் தந்தார். 9000 வார்த்தைகளைக் கொண்ட இந்த அகராதியில் வழக்குச் சொற்றொடர்கள் பல இருந்தன; இந்த அகராதிதான் பிற்காலத்தில் டாக்டர், ராட்லர், டாக்டர் வின்ஸ்லோ ஆகிய அறிஞர்களின் நூல்களுக்கு அடிப்படையாக அமைந்தது.

டாக்டர் ராட்லரின் தமிழ்-ஆங்கில அகராதி 1834-ஆம் ஆண்டில் தொகுக்கப்பட்டது. இதையடுத்து 1836-ஆம் ஆண்டில் ரேனியஸ் தமிழ் இலக்கணம் எழுதினார். 1855-இல் க்ரோல் என்பவர் தமிழ் மொழிபற்றி ஒரு நூல் எழுதினார்.

தமிழ் மொழி பற்றிய கடைசி ஜெர்மன் நூல், இரண்டாவது உலகப் போர் நடந்து கொண்டிருந்த போது வெளியாயிற்று. ஷெர்மான் பெய்தன் என்னும் அறிஞர் எழுதிய "தமிழ் மொழி இலக்கணம்" என்னும் அந்த நூல் 1943-ஆம் ஆண்டில் லீப்ஸிக் பட்டணத்தில் வெளியிடப்பட்டது.

தென்னிந்திய விஷயங்கள் பற்றி எழுதப் பெற்று ஓரளவு புகழடைந்திருக்கும் ஜெர்மன் நூல்களில் பெரும்பாலானவை திராவிடப் பெரும் பிரச்சனைகளையே முக்கியமாய்க் குறிப்பிட்டன. "திராவிடர்கள் எங்கிருந்து வந்தார்கள் ஆதியில்?" என்ற கேள்விக்கு இன்னமும் சரியான விடை தெரியவில்லை. இதுபற்றிய ஆராய்ச்சியானது அறிஞர்களுக்கு உவகையூட்டும் ஓர் அம்சமாக இன்னமும் இருந்து வருகிறது. முன்பு ஒரு சமயம் அடையாறு நூல் நிலையத்தின் பொறுப்பதிகாரியாயிருந்தவரும், சமீப காலம்வரை கீல் பல்கலைக்கழகத்தின் ஸம்கிருதப் பேராசிரியராயிருந்தவருமான டாக்டர் ஆட்டோ ஷ்ரேடர் திராவிட மொழிகள்பற்றிப் பல ஆராய்ச்சிகள் நடத்தியிருக்கிறார்.

ஃப்ரீட்ரிக் ராக்கெட் என்னும் ஜெர்மன் அறிஞரையும் தமிழ்நாடு வெகுவாகக் கவர்ந்தது. அவர் ஒரு கவிஞரும்கூட. கீழைநாட்டுப் பண்பாட்டில் ஜெர்மானியருக்கு 19-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட அக்கறையால் உந்தப்பட்டு அவர் ஸம்ஸ்கிருதக் கலாசாரத்தின் பழஞ்சிறப்பைப் பற்றி ஆழமாக ஆராய்ச்சி நடத்தினார். தமிழ் மக்களின் இலக்கியப் பண்புகளையும், மொழிப் பண்புகளையும் ஆராய்ந்தறியவும் அவர் முயன்றார். தாமே சொந்த முறையில் தமிழ் அகராதி ஒன்று தயாரிக்கும் வேலையை அவர் 1839-ஆம் ஆண்டில் ஆரம்பித்தார்; இந்தப் பெரும் பணியை அவர் 1862-ஆம் ஆண்டுவரை தொடர்ந்து செய்துவந்தார்.

திராவிடமரபுகள் பற்றிய ஜெர்மன் ஆராய்ச்சி தெலுங்கு, மலையாளம், துளு, கன்னடம் ஆகிய மற்ற மொழிகளையும் விடவில்லை. தெலுங்கு மொழியில் முதன் முதலில் ஆராய்ச்சி நடத்திய ஜெர்மன் அறிஞர் ஜே.ஸி. எஃப் ஹெயர் என்பவர்; அவர் 1842-ஆம் ஆண்டு குண்டூருக்கு வந்தார். அங்கே அவர் சமயநூல்கள் பலவற்றை எழுதினார்.

மலையாளத்தில் ஆராய்ச்சிகள்

மலையாள மொழியில் முதன்முதலில் ஆராய்ச்சி நடத்தியவர், ஜோஹான் ஏர்ன்ஸ்ட் ஹாங்க்ஸ்லெடன் என்னும் பேரறிஞர். ஸம்ஸ்கிருத மொழியின் மிகச்சிறந்த ஜெர்மன் அறிஞர் இவர் என்று புகழ்மிக்க மொழி வல்லுநர் ஜோஹான் ஃபிலிப் வெஸ்டின் பாராட்டியிருக்கிறார். "இவரோடு இன்றுவரை ஐரோப்பியர் எவருமே போட்டியிட்டு

வென்றதில்லை" என்று அந்த மொழி வல்லுநர் புகழ்ந்துள்ளார். ஜோஹான் ஏர்ன்ஸ்ட் ஹாங்க்ஸ் லெடனின் பெயர் கேரளத்தில் அனைவராலும் புகழப்பட்ட பெயராகும். இவர் மலையாள மொழி இலக்கண நூல் ஒன்றை எழுதியிருப்பதுடன், அகராதி ஒன்றையும் தொகுத்திருக்கிறார்.

மொழி வல்லுநர் ஜோஹான் ஃபிலிப் வெஸ்டின் ஓர் ஆஸ்ட்ரியப் பாதிரியார். அவர் 1774-ஆம் ஆண்டில் மலபாருக்குச் சென்று அங்கே பதினான்கு ஆண்டு காலம் தங்கியிருந்தார். தமது புதிய இல்லத்தின் மொழியை அவர் வெகு எளிதில் கற்றுக்கொண்டார். சிறு சிறு துண்டு பிரசுரங்கள்கூட அவர் மலையாளத்தில் வெளியிட்டார். மலையாள மொழியில் அவருக்கு அத்தனை புலமை இருந்தது. பாரதநாட்டு ஆராய்ச்சித் துறையில் ஐரோப்பா முழுவதும் அவருடைய புகழ் பரவியிருந்தது. ஆனால், ஸம்ஸ்கிருத மொழி ஆராய்ச்சியில் அவர் நிகழ்த்தியிருக்கும் சாதனை பொன் எழுத்துக்களால் பொறிக்க வேண்டியதாகும்; உண்மையில், ஸம்ஸ்கிருத ஆராய்ச்சி பற்றிய நூலில் அவருடைய பெயரைப் பொன்னெழுத்துக்களில் எழுதியிருக்கிறார்கள்.

கன்னடம், துளு மொழிகளில் ஆராய்ச்சிகள்

கன்னடம், துளு மொழிகளில் ஜெர்மானியர் பெற்ற புலமையைக் குறிப்பிடும்போது, கிட்டெல் என்னும் அறிஞரின் பெயர் முதலிடம் பெறவேண்டும். அவர் கன்னடம், துளு இரண்டு மொழிகளையும் நன்கு கற்றுக்கொண்டார்; அவ்விரண்டுக்குமிடையேயுள்ள தொடர்பையும் திராவிட மொழித் தொகுதியில் அவற்றுக்குரிய ஸ்தானத்தையும் பற்றி அவர் ஆராய்ச்சி நடத்தினார். சரியானபடி நவீன முறையில் முதன்முதலாகக் கன்னட மொழி அகராதி ஒன்று தயாரித்த பெருமை கிட்டெலைச் சார்ந்தது; அந்த அகராதி 1752 பக்கங்கள் கொண்டது.

முதலாவது உலகப் போருக்கு பிறகு, ஜே. புச்சர் எழுதிய கன்னட ஆங்கில அகராதி 1923-ஆம் ஆண்டு மங்களூரில் வெளியாயிற்று. கன்னட மொழியில் புலமை பெற்றவர்களில் ஜே. ஃப்ரான்மெயர் என்னும் ஜெர்மனியருக்கும் முக்கிய இடமுண்டு. ஆனால் கிட்டெலின் பெரு நூல்தான் இன்னமும் ஒப்பற்றதாக விளங்குகிறது. துளுவம் என்ற பழம் பெயர் கொண்ட தென்கன்னடப் பகுதியில் மட்டுமின்றி, கர்நாடகப் பிராந்தியம் பூராவிலுமே, அறிஞர்களுக்கும், மாணவர்களுக்கும் இன்றும் கிட்டெலின் இந்த நூல்தான் மிகச் சிறந்த அத்தாட்சி நூலாக விளங்குகிறது.

(Indian News and Translation Bureau)

நமது வாசகர்களுக்கு :—

வேலையிலிருந்து நீக்கப்பட்டால், முழு விவரத்துடன் அடியிற் கண்ட விலாசத்திற்குத் தெரிவிக்கவும் :—

SRI M. GANESAN,
Convener,
Vigilance Committee,
Board High School, **MELUR,**
(Madurai Dt.)

ஆரம்ப ஆசிரியர்களிடமிருந்து
கல்விக் கட்டுரைகள் தேவை

அனுப்ப வேண்டிய விலாசம் :—
Journal Secretary,
S. I. T. U. OFFICE,
Madras-28.

Regd. No. M. 3473

Registered with the Registrar of Newspapers for India under R. N. No. 1230/57.

THE SOUTH INDIAN TEACHER
&
'பாலர் கல்வி'

நிர்வாகஸ்தர்கள்

Publisher ..	SRI S. D. KRISHNAMURTHI RAO.
Editor ..	SRI G. KRISHNAMURTHI, M.L.C.
Journal Secretary ..	SRI C. RANGANATHA IYENGAR.
Additional Journal Secretaries.	1. SRI V. B. MURTHI. 2. SRI AVADHANIAR.
Advertisement Section Secretary.	SRI R. JAGANNADHAN.
Elementary Section Secretary. ..	SRI T. VEERASWAMI.

CANVASSERS

Madurai Dt. ..	SRI K. S. KRISHNAN, Sethupathi High School, Madurai.
Ramnad Dt. ..	SRI D. SEBASTIAN, Senjai Municipal Higher Ely. School, Karaikudi.
Tirunelveli Dt. ..	SRI M. SUBRAMANIAM, Headmaster, Municipal Ely. School, Melur, Tuticorin.
Coimbatore Dt. ..	SRI L. GOVINDARAJAN, S. R. High School, Pollachi.
Chingleput Dt. ..	SRI VARADA RAJAN, R. B. C. C. High School, Tiruvellore.

'THE SOUTH INDIAN TEACHER'

மாதாந்திரப் பத்திரிகை

வாசித்தீர்களா?

திரு. G. கிருஷ்ணமூர்த்தி, M.L.C., எழுதத் தொடங்கியிருக்கிறார்

Printed by Sri T. K. Venkatesan at the Jupiter Press Private Ltd., 109-C, Mount Road, Madras-18. Edited by Sri G. Krishnamurthi, M.L.C. & Published by Sri S. D. Krishnamurthi Rao, B. A., L. T., for the S. I. T. U., at Rajah Annamalaipuram, Madras-28.